Dinamalar

Dated: 04.02.2024

# வளைக்கரங்கள் வசம் 37!

## முடிவை தீர்மானிக்கும் பெண் சக்தி

– நமது நிருபர் –

தமிழகத்தில் மொத்தம் உள்ள, 39 லோக்சபா தொகுதிகளில், 37ல் பெண் வாக்காளர்களே அதிகம். அவற்றில் வெற்றி, தோல்வியை தீர்மானிக்கக்கூடிய சக்தியாக, பெண்களே திகழ்கின்றனர். இந்த 37லும், நீலகிரி லோக்சபா தொகுதியில், ஆண்களை விட அதிகமாக 52,776 பெண் வாக்காளர்கள் உள்ளனர்.

ஆண்களுக்கு ஆறுதலாக, தர்மபுரி, கிருஷ்ணகிரி தொகுதிகள் இரண்டு மட்டும் இருக்கின்றன. இங்கே மட்டுமே பெண்களை விட, ஆண் வாக்காளர்கள் அதிகம்.

இந்த விஷயம் அறிந்த கட்சிகள் எல்லாமே, பெண் வாக்காளர்களை கவர, என்னென்ன செய்யலாம் என யோசித்து வருகின்றன.

மாதம் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை, மகளிருக்கான இலவச பஸ் பயணம் போன்றவை, இத்தேர்தலில் தங்களுக்கு கை கொடுக்கும் என்பது, தி.மு.க.,வினரின் நம்பிக்கை.

பால் விலை, மின் கட்டணம், சொத்து வரி, விலைவாசி உயர்வு போன்றவற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சுட்டிக்காட்டி, ஆளும் கட்சிக்கு எதிராக பெண்களை திருப்ப, எதிர்க்கட்சிகள் திட்டமிடுகின்றன.

இம்முறை பெண்களுக்கு அதிகம் வாய்ப்பளிக்க பெரிய கட்சிகள் ஆலோசித்து வருகின்றன.



### பெண்கள் அதிகம் உள்ள தொகுதிகள்

| தொகுதி | கூடுதலாக உள்ள பெண்கள் எண்ணிக்கை |
|---|---|
| திருவள்ளூர் | 35,787 |
| வட சென்னை | 34,240 |
| தென் சென்னை | 20,182 |
| மத்திய சென்னை | 14,582 |
| ஸ்ரீபெரும் புதூர் | 19,410 |
| காஞ்சிபுரம் | 40,620 |
| அரக்கோணம் | 41,438 |
| வேலூர் | 46,091 |
| திருவண்ணா மலை | 23,669 |
| ஆரணி | 26,683 |
| விழுப்புரம் | 13,226 |
| கள்ளக்குறிச்சி | 21,065 |
| சேலம் | 2,018 |
| நாமக்கல் | 35,340 |
| ஈரோடு | 47,464 |
| திருப்பூர் | 25,243 |
| நீலகிரி | 52,776 |
| கோவை | 22,539 |
| பொள்ளாச்சி | 49,351 |
| திண்டுக்கல் | 46,376 |

| தொகுதி | கூடுதலாக உள்ள பெண்கள் எண்ணிக்கை |
|---|---|
| கரூர் | 41,602 |
| திருச்சி | 38,595 |
| பெரம்பலூர் | 43,216 |
| கடலூர் | 24,640 |
| சிதம்பரம் | 11,583 |
| மயிலாடு துறை | 24,590 |
| நாகப்பட்டினம் | 28,678 |
| தஞ்சாவூர் | 46,513 |
| சிவகங்கை | 51,235 |
| மதுரை | 27,795 |
| தேனி | 27,896 |
| விருதுநகர் | 35,177 |
| ராமநாதபுரம் | 11,953 |
| தூத்துக்குடி | 31,476 |
| தென்காசி | 31,664 |
| திருநெல் வேலி | 37,570 |
| கன்னியா குமரி | 1,996 |

**கூடுதலாக ஆண்கள் உள்ள தொகுதிகள்**

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி | 5,170 |
| தர்மபுரி | 17,200 |

Women voters will decide the Result in Tamil Nadu lok Sabha Election 2024 out of 39 parliamentary constituencies female voters are more than other voters.

Dinamalar
Dated : 05.02.2024

# தேர்தல்களில் சிக்கும் பணம் தொடர்ச்சியாக அதிகரிப்பு

**புதுடில்லி, பிப். 5–**

மத்திய நேரடி வரி வாரியம் தலைவர் நிதின் குப்தா கூறி உள்ளதாவது:

வழக்கமான சோதனைகளுடன், தேர்தல்களின் போது, வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக எடுத்துச் செல்லப்படும், கணக்கில் காட்டப்படாத பணத்தையும் வருமான வரித்துறை பறிமுதல் செய்து வருகிறது.

ஒரு மாநிலத்தில் முந்தைய தேர்தலை விட அடுத்து நடக்கும் தேர்தலில் சிக்கும் பணம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்தாண்டு இறுதியில், மிசோரம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடந்தது.

தேர்தல் கமிஷன் அறிக்கையின் படி, ரொக்கம், நகை, போதைப் பொருள், மது வகைகள், பரிசுப் பொருட்கள் என, 1,760 கோடி ரூபாய் மதிப்புள்ளவை பறிமுதல் செய்யப்பட்டன.

அதே நேரத்தில், இந்த மாநிலங்களில், 2018ல் நடந்த தேர்தலின்போது, 239 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. இதன்படி, பார்த்தால், ஏழு மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த மாநிலங்களில் பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் மட்டும், முந்தைய தேர்தலைவிட இரண்டு மடங்கு அதிகமாகும்.

அதுபோல, 2022ல் தேர்தல் நடந்த கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகண்ட், உத்தர பிரதேசம், ஹிமாச்சல பிரதேசம், குஜராத்தில், முந்தைய தேர்தலைவிட, ஆறு மடங்கு அதிகளவு ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

The Chairman Of Central Board of Direct Tax Thiru. Nithin Gupta has Stated that 'During Election period the percentage of money Seizure has been Increased'.